முன்னுரை

"ஃபிரஞ்சு இலக்கிய வரலாறு' எனும் என் நூலின் முந்தைய இரண்டு பாகங்களில் அவ்விலக்கியத்தின் தொடக்க காலத்திலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி வரையிலான வரலாறு எடுத்துக்கூறப் பட்டது. அவற்றைத் தொடர்ந்து மூன்றாம் பாகமாக வரும் இந்நூலில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஃபிரஞ்சு இலக்கியத்தின் போக்கும் வரலாறும் விவரிக்கப்படுகின்றன.

1789இல் ஃபிரான்ஸ் நாட்டில் வெடித்த புரட்சி நாட்டை இரத்தக் களரியாக்கியது மட்டுமன்றி, தான் மேற்கொண்ட கொள்கைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு நேர் விரோதமாக நாட்டை அரசரிடமிருந்து பிடுங்கி ஓர் இராணுவச் சர்வாதிகாரியின் கையில் ஒப்படைத்தது. நூற்றாண்டுத் தொடக்கத்தில் அந்தச் சர்வாதிகாரி தொடர்ந்து 14 ஆண்டுகள் நாட்டைப் போரில் மூழ்கடித்தான். பிறகு ஏழுதடவை ஆட்சிமுறையின் அடிப்படையே மாறியது: இரு முறை மன்னராட்சி, மீண்டும் ஒரு சர்வாதிகாரி ஆட்சி, இரு புரட்சிகள், இரண்டு தடவை மக்களாட்சி (குடியரசு), இத்துணையும் நூறு ஆண்டுகளுக்குள்! இந்த மாற்றங்களும் ஏமாற்றங்களும் சமுதாயக் கருத்தோட்டத்தில் ஆழ்ந்த தாக்கத்தை ஒவ்வொரு முறையும் உண்டாக்கின. அறிவியலில் முந்தைய ஆயிரம் ஆண்டுகள் காணாத அபார வளார்ச்சியும் அரிய இயந்திரங்களின் கண்டுபிடிப்பும் தொழிற் புரட்சியைத் தோற்றுவித்தன. கிராமப்புற விவசாய வாழ்க்கை முறையுடன் போட்டிபோட்டது, நகர்ப்புற தொழிற்சாலை வாழ்க்கை முறை. பெண்ணுரிமைக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. கீழைநாடுகளை, குறிப்பாக இந்தியாவை அறிந்து கொள்ள ஃபிரான்ஸ் மிக்க ஆர்வம் காட்டியதும் இந்நூற்றாண்டில்தான். இவை அனைத்தும் கவிஞர்கள், சிந்தனையாளர்கள், நாடக நாவலாசிரியர்கள் ஆகியோர் படைப்புகளில் எதிரொலிக்கக் காண்கிறோம். ஃபிரஞ்சு இலக்கியம் நோபல் பரிசு பெறப் பதினான்கு எழுத்தாளர்களை உருவாக்கப்போகிறது என்று சொன்னால், அதற்குரிய நாற்றங்காலாக விளங்குவது இப் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியம்தான்.

இக்காலகட்டம் ஃபிரஞ்சு இலக்கியத்தில் ஒரு பூத்த மலர்ச்சோலை. இங்கு வண்ணமிகு மலர்களுமுண்டு; வாசமிகு மலர்களுமுண்டு; எழில் கொஞ்சும் தூய மலர்களுமுண்டு; தீயவையில் பூத்த துன்ப மலர்களு-முண்டு. இவற்றினூடே வாசகர்களை அழைத்துச் சென்று இலக்கிய இன்பம் நுகரச் செய்வதே இந்நூலின் குறிக்கோள்.

தலைசிறந்த இலக்கியவாதிகளின் வாழ்க்கை வரலாற்றினையும், அவர்தம் முக்கியப் படைப்புகளையும் அவற்றில் பொதிந்த கருத்தோட்டங்-களையும் எழுதியிருக்கிறேன். சிறந்த படைப்புகளின் பல பகுதிகளின் தமிழாக்கமும், பானை சோற்றுக்குப் பதச்சோறாகச் - சுவைக்கச் சில துளிகளாக - முந்தின நூல்களின் பாணியிலேயே இந்நூலிலும் தரப் பட்டிருக்கின்றன.

இந்நூல் வெளிவருதற்கு முக்கிய காரணமாக இருக்கும் புதுதில்லி ஃபிரஞ்சுத் தூதரகக் கலாசாரத்துறையினருக்கு (Services Culturels, Ambassade de France, New Delhi) என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

புதுவை Alliance Française தலைவர் Dr. V. Nallam அவர்களுக்கும், இயக்குநர் Alain Thomas அவர்களுக்கும் Dr. S. Chandrasekar அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி என்றும் உரியது.

இவ்வெளிய நூலுக்கு மதிப்புரை தந்த இந்தியவியல் வல்லுநர் புதுச்சேரி ஃபிரஞ்சுக்கல்லூரி மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழக முன்னாள் இலக்கியப் பேராசிரியர் முனைவர் Prof Jean Louis Gabin அவர்களுக்கும் அணிந்துரை தந்த செந்தமிழ்க்கலாநிதி நூற்கடல் பண்டித வித்துவான் தி.வே. கோபாலய்யர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்நூல் ஆக்கத்திற்கு எனக்குப் பேருதவி செய்து வழிகாட்டி ஊக்குவித்த வித்துவான் திரு. கங்காதரன் அவர்களுக்கும் எனது நன்றிக்கடனை நவில வேண்டும்.

கண்ணைக்கவரும் வண்ணம் கணிப்பொறியில் வடிவமைத்துத் தந்த புதுச்சேரி New Age Computers நிறுவனத்தின் M/s இன்பமலர் அவர்களுக்கும், இதைத் தம் வெளியீடாகச் செய்து எனக்குப் பெருமை சேர்த்த 'காவ்யா' திரு. ஷண்முகசுந்தரம் அவர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் காரியம் யாவிலும் கைகொடுக்கும் என் மனைவிக்கு இம்முயற்சியை உரித்தாக்குகிறேன்.

வெங்கடராமன் ராஜகோபாலன்
4- B. கார்த்திக் குடியிருப்பு
100 அடிசாலை – புதுச்சேரி–5.
Tel: (0413) 2203993.
raja_santha@dataone.in

அட்டையை அலங்கரிப்பது பாரீஸ் லூவ்ரு காட்சியகத்தில் இருக்கும் E. Delacroix-வின் ஓவியம் (1830). "சுதந்திரம் மக்களை வழிநடத்திச் செல்கிறது" என்பது இதன் தலைப்பு

PREFACE

Du point de vue littéraire, intellectuel et artistique, le XIXe siècle français est avant tout celui du romantisme : comment n'intéresserait-il pas la sensibilité des Tamouls d'aujourd'hui ? Le culte du « Moi » chez la première génération des poètes romantiques français comme Chateaubriand, Musset, Lamartine, Vigny, Hugo fait suite aux changements violents que la société française vient de connaître à la fin du siècle précédent : la Révolution de 1789, sensée apporter une liberté nouvelle sur tous les plans, a été suivie d'une période d'intolérance et de massacres, celle de la Terreur. Les guerres de conquête napoléoniennes ont décimé une génération dans un climat politique intérieur de surveillance et de censure que Mme de Staël depuis son exil en Allemagne, ou Benjamin Constant dénonceront.

« L'homme est un apprenti, la douleur est son maître/Et nul ne se connaît tant qu'il n'a pas souffert », dira Musset dans la *Nuit de Décembre*, et Verlaine dans *Le pauvre Gaspard* : « Suis-je né trop tôt ou trop tard ? Qu'est-ce que je fais dans ce monde ? » Le refuge dans le lyrisme, le retour à la Nature, le culte du beau et du sentiment, la recherche des *Correspondances* entre l'univers et l'homme marquent beaucoup d'écrivains et de poètes, non seulement français mais européens. Mais ce qui les marque aussi c'est le désespoir, ou ce que Baudelaire nommera d'un mot anglais, le « Spleen ». Nous sommes dans une société en pleins bouleversements, en pleine instabilité, dont le futur devient imprévisible, qui s'enlaidit sous la dictature d'un industrialisme triomphant et d'un culte du « Progrès » par les « bourgeois » contre lesquels un poète lycéen, Arthur Rimbaud, mènera la

révolte. Ne retrouve-t-on pas, de nos jours, un culte du « héros romantique » en lutte contre sa destinée dans le roman, le théâtre ou le cinéma populaires tamouls ?

Le XIXe siècle littéraire français n'est pas seulement celui de la poésie, il est aussi celui du théâtre : le drame romantique qui bouleverse les règles de la tragédie classique et fait jouer aux hommes le rôle des dieux. Le goût de l'exotisme, du fantastique, dans le théâtre et le roman, coexistent avec le naturalisme et le réalisme : Balzac, grand romancier réaliste, est aussi inspiré par le surnaturel et l'occultisme dans *Louis Lambert* et *La Peau de chagrin*. Quant à la critique de la société, en même temps ironique et nostalgique, celle des romans de Flaubert est-elle si éloignée de celle de notre contemporain R.K. Narayan ? Balzac et Flaubert, mais aussi Hugo, Stendhal, Zola, Mérimée, Maupassant : l'essor du roman français au XIXe siècle, dans ses différentes écoles, a eu un retentissement mondial qui dure encore aujourd'hui.

Il revenait à M. Rajagopalan de présenter cette trentaine d'auteurs du XIXe siècle français en tamoul, de choisir et traduire des extraits de leur œuvre. M. Rajagopalan fait partie de cette élite francophone et francophile de Pondichéry, dont le seul défaut à mes yeux serait peut-être la trop grande modestie. Parfaitement multilingue, il passe aussi aisément du tamoul, sa langue maternelle, à l'anglais et au français dans lequel il a fait ses études ; multiculturel et interculturel, il anime brillamment depuis des dizaines d'années le cercle Bhairavi qui invite des musiciens carnatiques, souvent d'un très haut niveau, à se produire régulièrement à Pondichéry. Le cercle Bhairavi qui vient d'ailleurs d'être récompensé pour cette action culturelle directement par le Président de la république indienne. Quant aux compétences de M. Rajagopalan concernant la littérature et la langue françaises, qu'il a enseignées toute sa carrière à l'hôpital Jipmer, elles ne sont plus à démontrer depuis la parution en tamoul des deux précédentes anthologies de la littérature française, celle du XVIIe et du XVIIIe siècles, respectivement publiées en 2000 et en 2003, et qui ont été fort bien accueillies, ainsi que sa traduction des *Mains sales* de Jean-Paul Sartre.

Qu'il me soit permis de saisir cette occasion pour dire l'excellence de l'enseignement dispensé, dès l'époque coloniale, au Collège Français de Pondichéry. Toute son importance y avait été laissée à la langue maternelle des élèves, le tamoul, lequel pouvait être choisi comme première langue vivante dès l'entrée en sixième et jusqu'au Baccalauréat. L'enseignement de ce Collège français a favorisé la naissance de cette élite locale parfaitement bi ou trilingue, francophone et francophile, mais n'ayant pas perdu l'intérêt pour la langue et la culture tamoules, à laquelle je faisais allusion tout à l'heure, et qui s'illustra, en Inde comme en France, dans des carrières prestigieuses dans la justice, la médecine, l'enseignement, l'université. Pourquoi fallut-il qu'après la décolonisation certains directeurs de l'établissement, qui se nommait désormais le Lycée Français de Pondichéry, relèguent le tamoul à un rôle de deuxième ou troisième langue, tentent même de le supprimer purement et simplement ? Une bonne connaissance de la langue et de la culture maternelles n'est-elle pas le socle à partir duquel peut fleurir la découverte d'autres langues, d'autres cultures, que l'on étudie alors avec plaisir et non avec l'amertume d'un sentiment de perte ? Cette évidence pour les linguistes, qui a fait ses preuves à Pondichéry, pourrait être utilement méditée par les autorités qui ont organisé l'enseignement dans certains établissements de la banlieue française, où la population scolaire est parfois à 80 pour cent d'origine non-francophone, exactement comme si le français était la langue maternelle de chacun. Le jour où le tamoul sera enseigné en France dans les collèges et lycées fréquentés par les élèves tamoulophones, l'ouvrage que nous présente aujourd'hui M. Rajagopalan sera un outil extrêmement précieux.

M. Rajagopalan, qui avait une excellente connaissance de la langue et de la littérature tamoules a étudié le latin dans le secondaire. Cela lui permet d'aller aux sources mêmes de la langue et nous vaut aujourd'hui cette précision de traducteur dont je puis témoigner qu'il fait toujours preuve, avec des scrupules, des hésitations qui sont la marque de l'honnêteté intellectuelle, laquelle dépasse les frontières et la diversité des langages, non pas en les niant, ou en les mélangeant, mais au contraire en les pratiquant et en les faisant mieux connaître, pour comparer leurs finesses.

Je sais que notre auteur, dont j'évoquais pour commencer la modestie trop grande, sera gêné des compliments que je semble ici lui faire. Mais il s'agit en fait d'objectivité. Ayant enseigné dix ans au Lycée Français de Pondichéry, ayant eu l'honneur de pouvoir y contribuer au maintien de l'enseignement de la langue tamoule, je puis attester combien les capacités et le désir d'apprendre de la plupart des élèves d'origine tamoule sont forts, et combien en même temps le manque de connaissances dans leur propre langue est un handicap dans leur acquisition du français. Mais ceci n'est pas un problème particulier à cet établissement : la nouvelle bourgeoisie tamoule des grandes villes n'affecte-t-elle pas de parler anglais à ses enfants, et ne les inscrit-elle pas de préférence dans des « English Medium Schools » ?

Le présent ouvrage de M. Rajagopalan sur le XIXe siècle français, comme les deux précédents, et celui qui suivra sans doute, devrait trouver toute sa place au Lycée français de Pondichéry, comme modèle pour des versions, comme trait d'union entre les cultures, comme ferment interculturel. Mais c'est auprès du public tamoul le plus large qu'il jouera pleinement son rôle, et naturellement d'abord dans les bibliothèques et l'enseignement des départements de Français des Colleges et des Universités du Tamil Nadu, auprès des élèves qui préparent leur « BA » ou leur « MA French » ; n'oublions pas qu'il y a actuellement plus de cent millions de tamoulophones dans le monde, dont une diaspora importante aux Etats-Unis, en particulier dans la Silicon Valley, ce qui explique le si grand nombre de noms tamouls sur les brevets de logiciels électroniques. Et cette diaspora, souvent jeune et cultivée, est beaucoup plus sensible aux prestiges de la langue tamoule que ne le sont les générations fascinées par les mirages de la mondialisation parce qu'elles n'ont pas quitté le sol natal. On voit donc que cette anthologie de la littérature française, qui fut si riche au XIXe siècle, sera susceptible de toucher une large audience pour mettre à la portée du plus grand nombre quelques-unes des graines les plus fécondes du génie universel de l'humanité.

Dr. Jean Louis Gabin
Ancien professeur de littérature française
au Lycée Français et à l'Université de Pondichéry.

மதிப்புரை

Dr. Jean Louis Gabin அவர்களின் **Preface** இன் தமிழாக்கம்

இலக்கியம், அறிவியல், நுண்கலை ஆகியவற்றைப் பொறுத்தவரை ஃபிரான்ஸ் நாட்டின் 19–ஆம் நூற்றாண்டைப் புனைவியல் காலம் என்றே கூறுவர். ஆகவே இன்றைய தமிழர்களுக்கு அதில் உணர்வுபூர்வமாக ஆர்வம் இருப்பதில் வியப்பில்லை. முந்தைய நூற்றாண்டு இறுதியில் ஃபிரஞ்சு சமுதாயத்தில் நிகழ்ந்த புரட்சிகரமான மாறுதல்களைப் பின் தொடர்ந்து வந்தது, ஷத்தேர்ப்ரியர்-முய்சே-லமார்த்தீன்-விஞ்ஞி-உய்கோ போன்ற முதல் தலைமுறைப் 'புனைவியல்' கவிஞர்களின் சுயபுராணக் கவிதை. சமுதாயத்தின் அனைத்து மட்டத்திலும் ஒரு புதிய சுதந்திரக் காற்றை வீசச்செய்ய வேண்டும் எனும் நோக்கத்தில் 1789 இல் நடந்த புரட்சியைத் தொடர்ந்து வந்தது என்னவோ, சகிப்புத்தன்மையின்மையும் படுகொலைகளும் மேவிநின்ற "அதிபயங்கர" அரசியல் காலகட்டம்தான். அயல் நாடுகளுடன் நெப்போலியன் தொடுத்த தொடர்போர்கள் ஒரு தலைமுறையை அழித்து, உள்நாட்டு அரசியல் சூழலில் இரகசிய உளவுபார்த்தலையும், எழுத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தலையுமே நிலைபெறச் செய்திருந்தன. நாட்டை விட்டு வெளியேறி ஜெர்மனியில் தஞ்சம் புகுந்த மதாம் த ஸ்தாலும் பேழமே கோஸ்தா எனும் எழுத்தாளரும் இவற்றையே தம் எழுத்தால் சாடினர்.

''மனிதன் ஒரு கத்துக்குட்டி. துன்பம் அவனைக் கண்காணிப்பவன். துன்பப்படாதவர் யாரும் தம்மையறிந்து கொள்வதில்லை'' என்று கூறுவார் முய்சே, 'டிசம்பர் மாத இரவு' எனும் கவிதையில். 'ஏழை கஸ்பார்' எனும் கவிதையில் வெர்லேன், ''நான் என் காலத்துக்கு முன்னேயோ அல்லது மிகவும் காலந்தாழ்த்தோ பிறந்துவிட்டேனோ? நான் இவ்வுலகில் என்ன செய்துகொண்டிருக்கிறேன்?'' என்று தம்மையே வினவுவார். தம் உள்ளக் கிடக்கையைப் பாடுவது, இயற்கையில் தஞ்சம் புகுவது, அழகையும் உணர்ச்சிகளையும் ஆராதிப்பது, பிரபஞ்சத்திற்கும் மனிதனுக்குமிடையே தொடர்புகளைத் தேடுவது ஆகிய இயல்புகள் ஃபிரஞ்சுக் கவிஞர்களிடையே மட்டுமன்றி, வேறுபல ஐரோப்பியக் கவிஞர்களிடையும் காணப்படுகின்றன. இவைதவிர, ஒரு நம்பிக்கையிழந்த நிலையும், மற்றும் 'Spleen' எனும் ஆங்கிலச் சொல்லால் பொதலேர் குறிப்பிடும் மனச்சோர்வுநிலையும் அவர்களை ஆட்டுவிக்கின்றன. இன்று நாம் வாழும் சமுதாயத்தில் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஸ்திரத்தன்மை அறவே இல்லாத இதன் வருங்காலம் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. பீடுநடைபோடும் தொழில் வளர்ச்சியின் சர்வாதிகாரமும், புர்ழுவாக்களால் ஆராதிக்கப்படும் 'முன்னேற்றம்' எனும் மாயையும் இதை மேன்மேலும் அவலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவற்றை எதிர்த்துத்தான் கல்லூரி மாணவரான கவிஞர் அர்துயிர் ரேம்போ ஒரு போராட்டத்தை நடத்தினார். இன்றைய ஜனரஞ்சகத் தமிழ்ச்சினிமாக்களும், நாடகங்களும், நாவல்களும் சித்திரித்துக் காட்டுவது, புனைவியல் கதாநாயகனைப் போலத் தன் தலைவிதியை எதிர்த்துப் போராடும் ஒரு கதாபாத்திரத்தைத்தானே!

ஃப்ரஞ்சு இலக்கியத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு ஏற்றம் தந்தது கவிதை மட்டுமன்று; நாடகமும் கூடத்தான்: புனைவியல் நாடகம், செவ்வியல் நாடக விதிகளைத் தகர்த்து மனிதர்களைக் கடவுளர் பாத்திரங்களில் நடிக்க மேடையேற்றியது. கீழைநாடுகளின் வனப்பில் நாட்டமும், அமானுஷ்ய நிகழ்வுகளில் விருப்பமும், நடப்பியல் காலத்திலும் இயற்கையியல் காலத்திலும் காணப்பட்டன. பிரபல நடப்பியல் நாவலாசிரியரான Balzac எழுதிய Louis Lambert மற்றும் 'கோவேறு கழுதையின் தோல்' எனும் நாவல்களில், அமானுஷ்ய நிகழ்வுகளும், மாயாஜாலங்களும் இடம்பெற்றுள்ளன. வாழும் சமுதாயத்தை நகைச்சுவையுடனும், ஒரு பழமை ஏக்கத்துடனும் கிண்டல் செய்வதில், ஃப்ளொபேர் நாவல்களுக்கும், நமது தற்கால எழுத்தாளரான அமரர் ஆர். கே. நாராயண் கதைகளுக்கும் இடையே அப்படி ஒன்றும் அதிக வேறுபாடில்லையே! பல்சாக் ஃப்ளோபேர் மட்டுமன்றி, உய்கோ, ஸ்தாந்தால், சோலா, மெரிமே, மோபசா ஆகியோர் படைப்புகள் மூலம் கூடப் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஃபிரஞ்சு இலக்கியம் உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தியதையும், அது இன்றும் நிலைத்திருப்பதையும் காண்கிறோம்.

இத்தகைய எழுத்தாளர்கள் சுமார் முப்பது பேர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை அறிமுகப்படுத்தியும், அவர்கள்தம் படைப்புகளிலிருந்து சில பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்தும் இந்நூல் வழியே அளிக்க முன்வந்துள்ளார் திரு.ராஜகோபாலன். ஃபிரஞ்சு மொழிபேசும் ஆற்றலும் ஃபிரஞ்சு கலாசாரத்தில் பற்றும் கொண்ட அறிவுஜீவிகள் பலரைப் புதுவை ஈன்றுள்ளது. அத்தகையாருள் ஒருவரான திரு. ராஜகோபாலனிடம் நான் கண்ட ஒரே குறை என்று சொல்ல வேண்டுமானால் அது அவருடைய அளவுக்கு மிஞ்சின தன்னடக்கம் தான். பன்மொழி ஆற்றல் கொண்ட அவர் தம் தாய்மொழியாகிய தமிழிலிருந்து சரளமாக ஆங்கிலத்திற்கும், அவர் பயிற்று மொழியாகக் கற்ற ஃபிரஞ்சு மொழிக்கும் சென்று உரையாட வல்லவர். பல கலாசாரங்களிலும், கலாசாரத்தின் பல அம்சங்களிலும் தோய்ந்த அவர் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக 'பைரவி' எனும் சங்கீத சபாவின் ஜீவநாடியாகத் திகழ்ந்துவருகிறார். கர்நாடக சங்கீதத் துறையின் மிகப்பெரிய வித்துவான்கள் புதுச்சேரிக்கு வந்து தொடர்ந்து இச்சபாவின் சார்பில் தம் இசைக் கச்சேரிகளை வழங்கியுள்ளனர். இக்கலாசாரப் பணிக்காக, 'பைரவி' சபா பாரதக் குடியரசுத்தலைவரின் சன்மானத்தையும் பெற்றுள்ளது. தம் பணிக்காலம் முழுவதும் ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் ஃபிரஞ்சுமொழியாசிரியராகப் பணியாற்றிய திரு. ராஜகோபாலன், ஃபிரஞ்சு இலக்கியத்தின் 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டு வரலாற்றினைப் பேசும் இரு நூல்களை 2000, 2003 ஆம் ஆண்டுகளில் முறையே வெளியிட்டுள்ளார்; அவை நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளன. மேலும் ஃபிரஞ்சு அறிஞர் Jean Paul Sartre இன் 'Les Mains Sales எனும் நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இதற்கு மேல் அவருடைய தகுதியையும் ஆற்றலையும் பற்றிச் சான்று வேறு எதுவும் தேவையில்லை.

முந்தின ஃபிரஞ்சு ஆட்சிக்காலம் தொட்டே, புதுச்சேரி ஃபிரஞ்சுக் கல்லூரியில் அளிக்கப்பட்டு வந்த ஃபிரஞ்சு கல்வி முறையின் மிக உயர்ந்த தரத்தைப் பற்றிக் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். மாணவர்களின் தாய்மொழியாகிய தமிழுக்கு உரிய முழு முக்கியத்துவமும் அளிக்கப்பட்டிருந்தது. ஆறாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை தமிழை முதல் துணைமொழியாக எடுத்துப் படிக்க வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. இந்த ஃபிரஞ்சுக் கல்லூரியின் கல்விமுறை இரண்டு அல்லது மூன்று மொழிகளைச் சரளமாய்க் கையாளும் சதுரர்கள் பலரை உள்ளூர் மக்களிடையே தோற்றுவித்திருந்தது. தமிழ்மொழியிலும் கலாசாரத்திலும் உள்ள தம் பற்றை விடாமல், அதே சமயம் நான் மேலே குறிப்பிட்டிருந்தது போல் ஃபிரஞ்சு மொழி பேசும் ஆற்றலும் ஃபிரஞ்சு மொழிப் பற்றும் வாய்த்த இந்த வல்லுநர்கள், ஃபிரான்ஸ் நாட்டிலும் சரி, இந்திய நாட்டிலும் சரி நீதித்துறையிலும், மருத்துவத் துறையிலும், பல்கலைக்கழகத்திலும், மிக உயர்ந்த பதவிகளை வகித்துத் தம் புகழை நிலைநாட்டியுள்ளனர். காலனி ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு 'லிசே ஃபிரான்சே' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட இதே கல்லூரியின் இயக்குநர்கள் சிலர் தமிழ்மொழியை இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்துக்குத் தள்ளவும் மேலும் அறவே ஒழித்துவிடவும் ஏன் முயல வேண்டும்? தாய்மொழி மற்றும் கலாசாரத்தினைப் பற்றிய ஆழ்ந்த ஞானம், பிற மொழிகளையும் கலா-சாரங்களையும் தளிர்விட்டுத் தழைக்கச் செய்யும் விளைநிலம் அல்லவா? எதையோ இழந்துவிட்ட கசப்புணர்வு இன்றி, மாறாக மிக்க ஆர்வத்துடன் மற்ற மொழிகளை அறிந்துகொள்ளத் தூண்டுவதல்லவா அந்த ஞானம்?

புதுச்சேரிப் பரிசோதனையில் வெற்றிகண்ட இத்தாய்மொழிக் கொள்கை மொழியியல் வல்லுநர்களுக்கு ஓர் ஆதாரம். ஃபிரான்ஸ் நாட்டுப் புறநகர்ப்பகுதிகளில் அமைந்த சில கல்வி நிலையங்களில் நூற்றுக்கு 80 விழுக்காடு மாணவர்களின் தாய்மொழி ஃபிரஞ்சு அன்று; இருந்தும்கூட அங்கே அமலாக்கப்பட்டுவரும் கல்வி முறை, அனைத்து மாணவர்களும் ஃபிரஞ்சைத் தாய்மொழியாய் கொண்டிருந்தால் எப்படி அமையுமோ, அதே முறையில் அமைந்திருக்கிறது. இதற்குப் பொறுப்பான

அதிகாரிகள் புதுச்சேரியில் நிகழ்ந்த பரிசோதனையில் வெற்றிகண்ட மேலே சொன்ன கொள்கையை அமலாக்கினால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைச் சிந்திக்கவேண்டும். ஃபிரான்ஸ் நாட்டில் தமிழ்மொழி பேசும் மாணவர்கள் பயிலும் உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் தமிழ்மொழி கற்பிக்கப்படும்போது திரு. ராஜகோபலன் எழுதிய இந்நூல் மிகவும் விலை மதிப்பற்ற துணைக்கருவியாக விளங்கும்.

தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் நுண்ணறிவு மிக்க ராஜகோபாலன் மேல்நிலைப்பள்ளியில் லத்தீனைத் துணைமொழியாய்ப் பயின்றவர். இதன் காரணமாக அவர் ஃபிரஞ்சு மொழியின் ஊற்றுக் கண்ணுக்கே செல்ல முடிகிறது. ஆகவே, அவருடைய மொழிபெயர்ப்பில் எப்போதும் ஒரு நுட்பம் காணப்படும் என்பதை நான் அனுபவ பூர்வமாக அறிவேன். சில சமயங்களில் அவர் வெளிப்படுத்தும் சந்தேகங்கள், தயக்கங்கள் அவருடைய புத்திபூர்வ நேர்மைக்கு எடுத்துக்காட்டு. அந்த நேர்மை, மொழிகளின் பன்முகத்தன்மையையும் எல்லைக்கோடுகளையும் கடந்து நிற்பது. ஆதலின் அவர் அத்தகையை பன்முகத் தன்மையின் நுணுக்கங்களை ஒளிக்கவோ குழப்பவோ விழையாமல், உரிய வகையில் கையாண்டு ஒப்பாய்வின் வழியே அந்த நுட்பங்களைப் பரிமளிக்கச்செய்து காட்டுவார்!

நான் முன்பே குறிப்பிட்ட அளவுக்கதிகமான தன்னடக்கத்தின் காரணமாக, இந்நூலாசிரியருக்கு, நான் கூறும் புகழுரைகள் சற்றே இக்கட்டான நிலையைத் தோற்றுவிக்கக்கூடும் என்பதை நான் அறிவேன். ஆனால் இவை பாரபட்சமற்ற உண்மைகளன்றி வேறில்லை. பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் புதுவை ஃபிரஞ்சுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி அங்குத் தமிழ் மொழி தொடர்ந்து போதிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபட்ட பேறு பெற்றவன் என்கிற முறையில் நான் ஒன்றை நிச்சயமாக அறுதியிட்டுக் கூறமுடியும். தமிழ் மாணவர்களில் பெரும்பாலானவர்களின் ஆற்றலும் கற்கும் ஆர்வமும் மிகவும் தீவிரமானவை. அதேசமயம் தம் தாய்மொழியை அவர்கள் உரிய முறையில் அறியாதிருப்பது, ஃபிரஞ்சு மொழி கற்பதற்கு ஓர் இடையூறாகவே இருந்திருக்கிறது. ஆனால் இந்தப் பிரச்சினை புதுச்சேரி ஃபிரஞ்சுக் கல்லூரிக்கு மட்டுமே உள்ள தனிப் பிரச்சினை அன்று. பெரிய நகர்களில் வாழும் இன்றைய நடுத்தரவர்க்கத் தமிழர்கள் தம் குழந்தைகளுடன் ஆங்கிலத்தில் உரையாடும் போலித்தனத்தையும் அவர்களை ஆங்கில மீடியம் பள்ளிகளிலேயே சேர்க்க விரும்புவதையும் காண்கிறோம் அல்லவா?

திரு. ராஜகோபாலனின் பத்தொன்பதாம் நூற்றாண்டைப் பற்றிய இந்நூலும், இதற்கு முன்பாக வெளிவந்த இரு நூல்களும், இதன் தொடர்ச்சியாக நிச்சயம் வரவேண்டிய அடுத்த நூலும் புதுச்சேரி ஃபிரஞ்சுக்கல்லூரியில் உரிய இடத்தைப் பெற வேண்டும். ஃபிரஞ்சிலிருந்து தமிழுக்கு மொழியாக்கம் செய்வதற்கு ஒரு 'மாதிரி' நூலாகவும், இரு கலாசாரங்களை இணைக்கும் பாலமாகவும், கலாசார ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கும் உரமாகவும் இவை திகழும். மேலும் இதன் முக்கியப்பணி பெருவாரியான தமிழ்மக்களிடையேதான் இருக்கும்: குறிப்பாகத் தமிழ்நாட்டிலுள்ள ஃபிரஞ்சுமொழி போதிக்கும் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள், அங்கு உள்ள நூலகங்கள், ஃபிரஞ்சு B.A., M.A., படிக்கும் மாணவர்கள் ஆகியோரே இதன் இலக்கு. தற்போது பத்துக் கோடிக்கும் அதிகமான தமிழ் பேசும் மக்கள் உலகெங்கிலும் பரவியிருக்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இத்தமிழ்பேசும் மக்களுள் பெரும்பகுதியினர் அமெரிக்காவில் உள்ள 'சிலிகான் பள்ளத்-தாக்கு' எனப்படும் இடத்தில் இருக்கின்றனர். இதனால்தான் கம்ப்யூட்டர் சாப்ட்வேர் ப்ரொகிராம்களில் பல தமிழ்ப் பெயர்கள் காணப்படுகின்றன. இளமையும் சீலமும் மிக்க இவ்வெளிநாடு வாழ் தமிழர்கள் 'உலக-மயமாக்கல்' எனும் மாயையில் கிறங்கிநிற்கும் இத்தமிழ்நாட்டைவிட்டு வெளியே போகாத தலைமுறையினரைவிட, தமிழ் மொழியின் சிறப்பை நன்றாகவே உணர்ந்துள்ளார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில்

இத்துணைச் சிறப்பு வாய்ந்து திகழ்ந்த ஃபிரஞ்சு இலக்கியத்தினைப் பற்றிய இந்நூல் பெரிய வாசகர் வட்டத்தைச் சென்றடைந்து சர்வதேச மானுடத்தின் சீரிய சிந்தனைகள் சிலவற்றை மிகஅதிகமான மக்களிடையே கொண்டு சேர்க்கட்டும்!

Dr. Jean Louis Gabin
பேராசிரியர்,முனைவர் ழ்ா லூயி கபே
முன்னாள் இலக்கியப் பேராசிரியர்
புதுச்சேரி ஃபிரஞ்சுக்கல்லூரி மற்றும்
புதுச்சேரி பல்கலைக்கழகம்.